## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | CC 20/2024 |
| Deposition of witness | : | PW- 5 |
| Name | : | சுப்பிரமணி |
| Father Name | : | ரங்கசாமி |
| Village. | : | |
| Taluk | : | |
| Age | : | 48 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 15.05.2024.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது நான் திருப்பூர் மாவட்ட மற்றும் மாநகர காவல் தனிவிரல் பதிவு கூடத்தில் காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.02.2024ம் தேதி மாலை ஊத்துக்குளி காவல் நிலைய உதவி ஆய்வாளர் கன்னக்களவு சம்பந்தமாக கொடுத்த தொலைபேசி தகவலின் படி ஊத்துக்குளி குற்ற எண் 64/2024 சட்டப்பிரிவு 454, 457, 380 இதச ன் படி தகவலை பெற்று அன்று மாலை சுமார் 06.30 மணிக்கு நானும் எனது அலுவலக காவல் உதவி ஆய்வாளர் (விரல் ரேகை) எம் மணிகண்டன் ஆகியோரும் இரவு சுமார் 07:30 மணிக்கு சம்பவ இடமான A.பெரியபாளையம் ராஜாகணபதி நகரில் உள்ள ரஞ்சித்குமார் என்பவரின் வீட்டிற்கு சென்றோம்.

2. சம்பவ இடத்தில் இருந்த வெளிப்புற கதவு மற்றும் வீட்டில் இருந்த எதிரிகள் கைகளால் தொட்டு கலைத்து போட்டு சிதறி கிடந்த

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.05.15 18:36:12 +0530

பொருட்களையும் மற்றும் இரும்பு பீரோவையும் ஆய்வு செய்தபோது இரும்பு பீரோவில் இடது பக்க கதவின் வெளிப்புறம் இருந்த கைரேகையை S1 என்றும் இரும்பு பீரோ லாக்கர் கதவின் உட்புறம் இருந்த கைரேகைகள் S2, S3 என்று குறியீடு செய்து கைவிரல் ரேகையை சேகரித்தேன். பின்பு சம்பவ வீட்டில் வசிக்கும் இன்மேட் ரஞ்சித் குமார் அவரது மனைவி தாமரைச்செல்வி அவரது மகள்கள் ரஞ்சினி, ரனிகா ஆகியோரின் கைவிரல் ரேகைகளை ஒப்பீட்டுக்காக பதிவு செய்தோம். சம்பவ இடத்தில் கிடைத்த ரேகைகளை இன் மேட்டுகளுடன் ஒப்பீடு செய்த போது அதில் S1 என்று குறியீடு செய்த ரேகையானது ரஞ்சித் குமார் S/o. ராஜேந்திரன் என்பவரது இடது கை பெரு விரலுடன் ஒத்துப்போனது என்றும் இன்மேட்டு ஃபிங்கர்பிரிண்ட் கம்பரிசன் ரிப்போர்ட் வழங்கினேன்.

3. ஆனால் S2, S3 என்று குறியீடு செய்த கைரேகை ஆனது மேற்கண்ட இன் மேட்டுகளுடன் ஒத்துப் போகவில்லை. எனவே அந்த இரண்டு ரேகைகளையும் எனது அலுவலகத்தில் உள்ள NAFIS மூலம் கணினியில் பதிவு ஏற்றப்பட்ட முன் வழக்குள்ள வழக்கமான குற்றவாளிகளின் கை விரல் ரேகைகளுடன் ஒப்பிட்டு பார்த்ததில் அந்த சம்பவ இடத்தில் கிடைத்த S2, S3 என குறியீடு செய்த ரேகையானது திருப்பூர் மாநகரம் வடக்கு காவல் நிலைய குற்ற எண். 1373/2023 சட்டப்பிரிவு 379 இதச பிரிவின் படி வழக்கில் தொடர்புடைய எதிரியான கார்த்திக் S/o. செந்தில்குமார் என்பவரின் வலது கை ஆள்காட்டி விரல் மற்றும் இடதுகை நடுவிரல் ரேகையுடன் ஒத்துப் போயின என்பதை ஊத்துக்குளி காவல் நிலையத்திற்கு தெரிவித்தும் பின்பு எனது ஆய்வறிக்கைகளை வழங்கினேன். **(மேற்படி ஆய்வறிக்கை Unidentified chance print comparison report மற்றும் NAFIS report அ.சா.ஆ.4 ஆகவும்**

**மற்றும் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த அடுத்தநீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. திறந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டதால் சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது. .

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.